செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 462 நாள்: 4/8/17

ந.க.பி3/24370/2014

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாள்: 03.08.2017.

## பத்திரிக்கை செய்தி

அரசாணை (நிலை) எண் 540 வருவாய் (LD6(2)) துறை, நாள்:04.12.2014 -ன்படி அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் அகற்றுதல் தொடர்பாக அளிக்கப்படும் மனுக்களை அந்தந்த வட்ட/கோட்ட/மாவட்ட அலுவலகங்களில் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அம்மனுக்களின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் உள்ள அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்கள் குறித்த மனுக்களை பதிவு செய்ய இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் http://gdp.tn.gov.in என்ற இணையதளத்திற்குள் சென்று தங்களது அலைபேசி எண்ணை பதிவு செய்தவுடன் கடவுச்சொல் (One Time Password) ஒன்று அனுப்பி வைக்கப்படும், அதை உள்ளீடு செய்து தங்களது புகார்களை பதிவு செய்யலாம். பொதுமக்கள் தங்களது மனுக்களை http://gdp.tn.gov.in என்ற வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யதவுடன் சம்பந்தப்பட்ட வட்ட/கோட்ட/மாவட்ட அலுவலகங்களுக்கு மனுக்கள் அனுப்பப்படும். தங்களின் மனு தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் மேற்படி இணையதளம் மூலம் 60 தினங்களுக்குள் அறிந்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே மேற்படி இணையதள சேவையினை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-சி.அ.ராமன்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்-9.

// ஆணைப்படி //

மாவட்ட ஆட்சியருக்காக 4/8/17

செ.ம.தொ.அ. 4/8/17
வேலூர்- 9.

4/8/17